தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 5

சுட்டெண்:

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. செங்குட்டுவன் ________________ நாட்டின் இளவரசன்.

( சோழ, சேர, பாண்டிய )

2. ________________ நூலகத்திற்குச் சென்று படி!

( நீங்கள், நாங்கள், நீ )

3. மண்ணைக் குழைத்து மட்பாண்டங்கள் செய்பவர் ________________ .

( குயவர், உழவர், நெசவாளர் )

4. கசப்பை நீக்குவது ________________ .

( உப்பு, இனிப்பு, துவர்ப்பு )

5. ஒன்று திரண்டால் வலிமை பெறும் கொடி ________________ .

( மல்லிகைக்கொடி, முல்லைக்கொடி, அடம்பன்கொடி )

6. “தமிழுக்கும் அமுது என்று பேர் ...” என்று கூறியவர் ________________ .

( பாவேந்தர், ஔவையார், பாரதியார் )

7. வானம் + வில் ________________ .

( வானம்வில், வானவில், வாணவில் )

8. வண்டி இழுப்பதற்குப் பயன்படும் விலங்கு ________________ .

( யானை, ஆடு, குதிரை )

9. **பழமொழி:**

முயற்சி ________________ ஆக்கும்.

( இருவினை, திருவினை, பிறவினை )

10. புலி உறுமும். அதுபோல யானை ________________ .

( கத்தும், முழங்கும், பிளிறும் )

11. கடலும் கடல் சார்ந்த நிலமும் ________________ .

( நெய்தல், குறிஞ்சி, முல்லை )

12. துன்பம் வரும்போது தோள் கொடுத்து உதவுபவன் ________________ .

( பகைவன், நண்பன், இரண்டகன் )

13. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ________________ .

( நாலடியார், திருக்குறள், சிலப்பதிகாரம் )

14. காளை அடக்குதல் என்பது ________________ .

( ஏறுதழுவுதல், சடுகுடு, சிலம்பம் )

15. ஒளி என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( இருள், பகல், குளிர் )

16. கோவலனைப் பிரிந்த கண்ணகி ________________ வாழ்ந்தாள்.

( ஓட்டமும்நடையுமாக, பேரும்புகழுமாக, தன்னந்தனியே )

17. நாங்கள் சிலை செதுக்கினோம். நீங்கள் சிலை ______________ .

( செதுக்கினீர்கள், செதுக்கினார்கள், செதுக்கினோம் )

18. இரவில் கூடும் அங்காடி ______________ .

( நாளங்காடி, அல்லங்காடி, சிறப்பங்காடி )

19. பட்டிப்பொங்கலை ______________ என்றும் அழைப்பர்.

( தைப்பொங்கல், உழவர்திருநாள், மாட்டுப்பொங்கல் )

20. ஒலிம்பிக் விளையாட்டு ______________ நாட்டில் தொடங்கப்பட்டது.

( ஆபிரிக்க, கிரேக்க, அமெரிக்க )

21. ஆசிரியர் கூறிய நகைச்சுவையைக் கேட்டு மாணவர்கள் ______________ எனச் சிரித்தனர்.

( மளமள, கலகல, சலசல )

22. **விடுகதை:**

நாடெல்லாம் சுற்றிவரும் நாட்டுக்குள் வராது. அது என்ன?

______________

( தொடருந்து, விண்ணுந்து, கப்பல் )

23. உயிர் எழுத்துகள் ______________ .

( 12, 18, 30 )

24. ஈரூடக உயிரிகளில் ஒன்று ______________ .

( ஓணான், முதலை, சிலந்தி )

25. "ஆற்றங் கரையில் மரமும் அரசு அறிய.... " என்ற பாடல் இடம்பெற்ற நூல் ______________ .

( நன்னெறி, ஆத்திசூடி, நல்வழி )

26. **குறள்:**

உடுக்கை இழந்தவன் கைபோல - ஆங்கே
______________ களைவதாம் நட்பு

( இடுக்கண், கடுக்கன், தோற்கண் )

27. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பன ______________ .

( ஆனைந்து, ஐம்புலன், ஐம்பொறிகள் )

28. பறவைகள் மரத்தில் இருந்தன. ______________ கனிந்த பழங்களைக் கொத்தித் தின்றன.

( அவை, அது, அவர்கள் )

29. ஈழத்தின் கீழ்த்திசையில் அமைந்துள்ள இடம் ______________ .

( மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு )

30. பழந்தமிழர் தாம் வாழ்ந்த நிலங்களை ______________ வகுத்தனர்.

( நான்காக, மூன்றாக, ஆறாக )

புள்ளிகள் 30

## 2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. சேந்தன் ________________ ச் சென்றான். அவன் ________________ பாடங்களைப் படித்தான்.

   ( பள்ளி )

2. நான் ________________ அறையைத் தூய்மையாக வைத்திருப்பேன். எனது பெற்றோர் ________________ மகிழ்ந்து பாராட்டுவர்.

   ( நான் )

3. மக்கள் விழாக்காலங்களில் அதிகமாக ________________ ச் செல்வர். அவர்கள் ________________ கடவுளை வணங்குவர்.

   ( கோவில் )

4. நாங்கள் பனை ________________ பல பயன்களைப் பெறலாம். பனை ________________ ஆசிய நாடுகளில் அதிகமாகக் காணலாம்.

   ( மரம் )

5. ஔவையார் பல ________________ இயற்றினார். அவரது ________________ நாம் அறிவைப் பெறுகின்றோம்.

   ( பாடல்கள் )

| புள்ளிகள் 10 |
|---|

## 3) கோடிட்ட சொற்களின் எதிர்ச்சொற்களை எழுதுக.

1. ஆசிரியர் வெற்றி பெற்ற மாணவரைப் பாராட்டினார். அவர் ______________ அடைந்த மாணவர்களையும் ஊக்கப்படுத்தினார்.

2. பிறருக்கு உதவும் மனம் மாறனுக்கு உண்டு. ஆனால் அவனிடம் பணம் ______________ .

3. காலையில் பறவைகள் இரை தேடச் செல்லும். அவை ______________ கூடுகளுக்குத் திரும்பும்.

4. நாங்கள் தாயகத்திலிருந்து கமழ்வுப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றோம். நாங்கள் எரிபொருட்களைப் பிறநாடுகளிலிருந்து ______________ செய்கின்றோம்.

5. குயிலி உண்மை பேசுவதால் எல்லோராலும் மதிக்கப்படுகின்றாள். அவளது நண்பி ______________ பேசுவதால் நன்மதிப்பை இழக்கின்றாள்.

புள்ளிகள் 05

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. நாம் ஊரோடு ஒத்து __________________ வேண்டும்.

   ( வாழ,   வாள )

2. வரகு, சாமை போன்றன __________________ ஆகும்.

   ( கூளங்கள்,   கூலங்கள் )

3. தமிழர் __________________ உணவுகளை உண்பர்.

   ( அறுசுவை,   அருசுவை )

4. ஒருவரின் __________________ அறிந்தே நட்புக் கொள்ள வேண்டும்.

   ( பன்பை,   பண்பை )

5. நண்டுகள் __________________ ஊர்ந்து சென்றன.

   ( கடற்கரையில்,   கடற்கறையில் )

புள்ளிகள் 05

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| முன்னோர்கள் | வென்று | வாழ்க்கை |
| அறிவியல் | ஒற்றுமை | |

முற்காலத்தில் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தனர். அதனால் அவர்களது ________________ மகிழ்ச்சி நிறைந்ததாக இருந்தது. ஆனால் இன்று ________________ வளர்ச்சியின் உச்ச நிலையில் வாழ்கின்ற நாம் ஒற்றுமையின்றி வாழ்கின்றோம். நம்மிடையே ________________ குறையும் பொழுது பகைவன் எளிதாக எம்மை ________________ விடுவான். இதைத் தான் நம் ________________ "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு" என்று சிறப்பாகக் கூறியுள்ளனர். எனவே நாம் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக வாழ்வோம்.

புள்ளிகள் 10

## 6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழீழத்துக்கு வெளியே தமிழர்கள் வாழும்பகுதி மலையகம் ஆகும். மலையகம் இயற்கை அழகு நிறைந்த இடமாகும். இங்கு வானுயர ஓங்கிய மலைகளின் மீது முகில்கள் படர்ந்திருப்பது கண்கொள்ளாக்காட்சியாகும். மலைகளிடையே அருவிகள் தவழ்ந்து வருவதும் அவை குன்றுகளிடையே ஏறிப்பாய்வதும் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. ஈழத்தை ஆங்கிலேயர் கைப்பற்றிய பின் அவர்கள் மலையகத்தின் இயற்கை வளத்தைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்கள் அங்கே காணப்பட்ட காலநிலைக்கு ஏற்ப தேயிலை, கோப்பி, இறப்பர் ஆகிய பெருந்தோட்டப்பயிர்களைப் பயிரிட்டனர். அப்பயிர்களால் ஆங்கிலேயர் எமது நாட்டிலிருந்து, அதிக வருமானத்தைப் பெற்றனர்.

1. இயற்கை அழகு நிறைந்த இடம் எது?

______________________________

2. எது கண்கொள்ளாக்காட்சி ஆகும்?

______________________________

3. ஈழத்தைக் கைப்பற்றியவர் யார்?

______________________________

4. பெருந்தோட்டப்பயிர்கள் எவை?

______________________________

5. மலைகளிடையே எவை தவழ்ந்து வருகின்றன?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 7) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்?

______________________________

2. மருதநில மக்களை எவ்வாறு அழைப்பர்?

______________________________

3. தமிழ்நாட்டில் பல்லவ மன்னவர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

______________________________

4. மன்னாரில் உலகப் புகழ்பெற்ற வணிகப் பொருள் எது?

______________________________

5. நாம் நோயின்றி வாழ்வதற்கு அகத்தியமானவை எவை?

______________________________

6. சோழரது கொடி எது?

______________________________

7. பாவேந்தர் கல்வியின் தேவையை வலியுறுத்தி எழுதிய நூல் எது?

______________________________

புள்ளிகள் 10

## 8) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நான் எனது அப்பாவுடன் சந்தைக்குச் சென்றேன். சந்தையில் நான் காய்கறிகளையும் பழங்களையும் கண்டேன். எனது அப்பா சில காய்கறிகளும் பழங்களும் வாங்கினார். எனக்குக் கீரையும் வாழைப்பழமும் உண்ண விருப்பம்.

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

* வளங்கொழிக்கும் மன்னார்
* பாவேந்தர்
* வீட்டுத்தோட்டம்
* கதிரவன்

புள்ளிகள் 15

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை